# கிளைமெட் வாய்சஸ் (பருவ நிலை மாற்ற குரல்கள்)

சுற்றுப்புற சூழல் மற்றும் பருவ நிலை மாற்றம் குறித்த கொள்கைகளில் பொதுமக்களின் பங்கேற்பு

Rainmatter Foundation

Civis

# உள்ளடக்கங்கள்


முன்னுரை/ அறிமுகம் 02

பகுதி 1: பருவ நிலை மாற்றம் குறித்த குடிமக்கள் நடவடிக்கை 04

பகுதி 2: பொது சமுதாயம் மற்றும் இலாபமற்ற அமைப்புகளின்பருவ நிலை மாற்றம் குறித்த நடவடிக்கைகள் 13

பகுதி 3: ஊடகங்களில் பருவ நிலை மாற்றம் குறித்த நடவடிக்கைகள் 19

பிற வளங்கள் 23

நன்றிகள் 25

# அறிமுகம்




## கலந்தாலோசனை  என்றால் என்ன ?

பொதுமக்களோடு கலந்தாலோசனை என்பது புதிய சட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் செயல்படுத்துவதற்கு முன்பு அல்லது ஏதேனும் முக்கிய விஷயங்களில் மக்களிடம்பின்னூட்டம், கருத்துகள்மற்றும் பரிந்துரைகள் பெரும் ஒரு செயல்முறைஆகும். கலந்தாலோசனைமூலம் அரசின் வெளிப்படைத்தன்மை அதிகரிப்பதோடு மக்களின் தேவைகளுக்கும் இலட்சியங்களுக்கும் உடனே பதில் கிடைக்கும்.

கலந்தாலோசனை பொது மக்கள் கேட்புரை, கணக்கீடு, கவனக் குழு கலந்துரையாடல் மற்றும் இணையத்தளம் போன்ற முறைகளில் நடத்தப்படலாம். அவை பொதுவாக அரசாங்கத்தின் அமைச்சகத்தாலோ, துறையாலோ , ஒழுங்குமுறை ஆணையங்களாலோ அல்லது சிவில் சமுதாய அமைப்புகளாலோ நடத்தப்படும்.

புதிய சட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் செயல்படுத்துவதற்கு முன்பு அல்லது ஏதேனும் முக்கிய விஷயங்களில்குறிப்பிட்ட சம்மதப்பட்டவர்கள் சிலர் மற்றும் பொது மக்கள் தங்கள் கருத்துக்களை அளிக்க அழைக்கப்படுவார்கள். அவர்கள் கூறும் கருத்துகள்முடிவுகள் எடுக்கும்போது கருதப்படும். கலந்தாலோசனை மூலம் கொள்கைகளை உருவாக்குவோருக்கு பிரச்சனைககளை முன் கூட்டியே தெரிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. மேலும் பொது கொள்கைகள்எவ்வாறு வடிவமைக்கப்படுகிறது என்றும் முடிவுகள் எவ்வாறு மக்களின் தேவைகளை மனதில் கொண்டு எடுக்கப்படுகிறது என்றும் பகிர ஒரு வாய்ப்பு அளிக்கிறது.




# சுற்றுப்புற சூழல் மற்றும் பருவ நிலை மாற்றம் குறித்த கலந்தாலோசனை

சுற்றுப்புற சூழல் கொள்கைகள் குறித்த கலந்தாலோசனை மக்களுக்கு அந்த கொள்கைகள் பற்றி தங்களுக்கு இருக்கும் கருத்துக்களை பகிர வாய்ப்பு அளிக்கிறது. உதாரணத்திற்கு உங்கள் ஊரில் போக்குவரத்து நெரிசலாலும் தொழிற்சாலைகளிலிருந்து வரும் உமிழ்வுகளாலும் காற்றின் தரம் குறைகிறது. இந்த நிலையை மாற்றி மக்கள் நல்வாழ்விற்காக அரசாங்கம் புதிய கட்டுப்பாடுகளையும் தூண்டுவிசைகளையும் கொண்டு வருகிறது. காற்று மாசு என்பது அனைவரையும் பாதிக்கும் ஒரு பிரச்சனையாக இருப்பதால் உங்களுக்கும் இந்த நடவடிக்கைகளில் பங்கு கொண்டு இவைகள் எப்படி வடிவமைக்கப்படுகின்றன மற்றும் செயல்படுத்தப் படுகின்றன என்று காண ஆர்வம் இருக்கும் அல்லவா ? அரசாங்கம் எவ்வாறு செலவுக்கேற்ற நன்மை பகுப்பாய்வு செய்து முடிவு எடுக்கிறது என்பதை அறிய விரும்புவீர்கள் அல்லவா?

பருவ நிலை மாற்றம் குறித்த சட்டங்களும் கொள்கைகளும் அனைவரையும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கின்றது. எனவே கலந்தாலோசனை தனி நபர்கள், சமூகம் மற்றும் சிவில் சமுதாயம் மற்றும் இலாபமற்ற அமைப்புகள் என்று அனைத்து வகையான மக்களையும் உள்ளடக்க வேண்டும்.

இந்தியாவின் சுறுப்புற சூழல் மற்றும் பருவ நிலை மாற்றம் குறித்த சட்டங்கள் இயற்றுவதில் பெரும் பங்கு வகித்த சிலரை பற்றி தகவல்கள் இந்த கையேட்டில் உள்ளது. பருவ நிலை மாற்றம் குறித்த கலந்தாலோசனைகளில் பங்கு கொள்வதன் மூலம் நம் எதிகாலத்தை நிர்ணயிக்கும் கொள்கைகளில் நீங்கள் நேரடியாக பங்கு கொள்ளலாம். எனவே முனைப்பான குடிமகனாக முதல் அடியை எடுத்து வையுங்கள்



பகுதி 1

# பருவ நிலை மாற்றம் குறித்த குடிமக்கள் நடவடிக்கை



# பருவ நிலை மாற்றம் குறித்த குடிமக்கள் நடவடிக்கை

## பொது கலந்தாலோசனையில் பங்கு கொள்வது எப்படி?

கொள்கைகள் சுற்றுப்புறசூழல், பொருளாதாரம் மற்றும் சமூக தேவைகளை சமமாக பார்த்து பகுத்து வளங்குன்றா வளர்ச்சிக்கு வழி வகுக்க பொது கருத்துகள் உதவுகின்றன. உங்கள் வாழ்க்கையை பாதிக்கும் சில நடவடிக்கைகளில் நீங்கள் பங்கு கொள்ள சில வழிகளை கீழே காணலாம்:

### 1. ஆய்வு

உங்கள் ஊரில் தற்போது நடைபெறும் கலந்தாலோசனை மற்றும் பருவ நிலை மாற்றம் குறித்த கொள்கைகளை ஆய்வு செய்வதன் மூலம் உங்கள் பங்கை தொடங்கலாம். இந்தியாவில் பொது கலந்தாலோசனை மத்திய, மாநில மற்றும் உள்ளூர் அளவில் நடத்தப்படுகின்றன. இவற்றை மூன்று வகையாக பிரிக்கலாம்

- புதிய சட்டங்கள் அறிமுகம் செய்தல்: புதிய சட்டங்கள் பருவ நிலை, சுற்றுச்சூழல், வேளாண்மை மற்றும் அதை ஒத்த பல தொழில்களை ஏதோ ஒரு வகையில் பாதிக்கும். இதற்கான கலந்தாலோசனையில் நீங்கள் கடிதம் மூலமோ அல்லது நேரில் சென்றோ உங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். சென்னை மும்பை போன்ற பல நகரங்கள் தற்போது வரைவு பருவ நிலை மாற்ற நடவடிக்கை திட்டங்களை வெளியிட்டு வருகின்றன.

- சட்ட சீர்த்திருத்தம்: நடைமுறையில் இருக்கும் சட்டங்களையும் கொள்கைகளையும் சீர்த்திருத்தம் செய்ய அத்திருத்தங்களின் வரைவு அல்லது அதை பற்றிய அறிவிப்புகள் அப்பப்போது வெளியிடப்படும்.

- முன்மொழியப்பட்ட திட்டப்பணிகள்: இவை பொதுவாக மாநிலங்களின் மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாநில சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு ஆணையம் அல்லது உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும். இவற்றை பற்றிய தகவல்கள் இணையதளத்தில் பெறலாம்

மத்திய அரசு நடத்தும் கலந்தாலோசனை பற்றியதகவல்கள் பொதுவாக இணைய அரசிதழிகளின் மூலமாகவோ சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும்

பருவ நிலை மாற்றம் அமைச்சகத்தின் வலைத்தளத்திலோ பெறலாம். மாநில மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் கலந்தாலோசனை பற்றிய தகவல்கள் அரசிதழிகளின் மூலமாகவோ அல்லது செய்தித்தாள்கள் மூலம் பெறலாம்..

## 2. தகவல் சேகரிப்பு

பல தரப்பிலிருந்து தகவல் சேகரித்து மும்மொழியப்பட்ட கொள்கைகள் உங்களுக்கும் உங்களை சுற்றியுள்ளவர்களுக்கும் எந்த வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அறிந்து கொள்ளுங்கள். கலந்தாலோசனை பற்றிய அறிவிப்போ அல்லது வரைவு ஆவணங்களை வெளியிடும் போதோ அந்த கொள்கை குறித்த விரிவான தகவல்களையும் அரசு வெளியிடும். இது மட்டும் இன்றி நாளிதழ் மற்றும் நம்பகமான வலைப்பதிவுகளிலிருந்து நீங்கள் மேலும் தகவல்கள் சேகரிக்கலாம். இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தி இந்து போன்ற அமைப்புகள் தங்கள் நாளிதழில் கொள்கைகள் மற்றும் சட்டங்களை பற்றி சிறப்பாக விவரிக்கின்றன. பல அமைப்புகள் வாட்சாப் குரூப் மூலமும் தகவல்களை பகிர்கிறார்கள். அதில் சேர்ந்தும் தகவல்களை பெறலாம்.

## 3.கலந்தாலோசனையில் பங்கு கொள்ளுதல்

பொது மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க பொது மக்கள் கேட்புரை மற்றும் பொதுக்கூட்டம் போன்றவை பொதுவாக ஏதேனும் துறையாலோ ஆணையத்தாலோ அல்லது அமைப்பாலோ நடத்தப்படும். வரவிருக்கும் கொள்கைகள் அல்லது திட்டப்பணியைப் பற்றி உங்களுக்கு இருக்கும் கருத்துகளை தெரிவிக்க இது ஒரு சிறந்த வாய்ப்பு. உதாரணத்திற்கு மகாராஷ்ட்ரா மாநிலத்தில் மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் தாங்கள் நடத்தும் கலந்தாலோசனைகளை பற்றிய தகவல்களை தங்கள் வலைத்தளத்தில் முன் கூட்டியே வெளியிடுவார்கள்.

## 4. அனுபவங்களை பகிர்தல்

முன்மொழியப்பட்ட கொள்கையின் தாக்கத்தை பற்றி உங்களுக்கு முன் அனுபவங்கள் இருந்தால் அதை பகிர்வது கொள்கைகளை வகுப்பவர்களுக்கு தாங்கள் எடுக்கும் முடிவுக்கள் மக்களை எந்த வகையில் பாதிக்கிறது என்று உணர உதவும். எடுத்துக்காட்டாக குமரி மாவட்டம் தூத்தூர் மீனவர்கள் இயற்கையை பாதிக்காத வகையில் சுறா மீன்களை பிடிப்பது எப்படி என்று பகிர்ந்திருக்கிறார். கலந்தாலோசனைகளில் இது போன்று மீனவர்கள் பகிர்ந்த அனுபவங்கள் ஆராய்ச்சி கூடங்களிலிருந்து வரும் அறிக்கைகளை காட்டிலும் சிறப்பானது.

## 5. தரமான கருத்துகளை முன் வையுங்கள்

அப்படி வைக்கும் போது கீழே உள்ள சில குறிப்புகளை பின்பற்றுங்கள்:

- நுணுக்கமான கருத்துகள்: உங்கள் கருத்துகள் பொதுப்படையாக இல்லாமல் கொள்கையின் ஏதோ ஒரு குறிப்பிட்ட பகுதியின் மேல் நுணுக்கமாக இருப்பது கொள்கை வகுப்பவர்களுக்கு உங்களுடைய கருத்துகளை ஏற்று கொள்ள வசதியாக இருக்கும். மேலும் கொள்கையின் மீது ஒரு மனதோடு கவனம் அளித்து அதன் மீது மட்டும் கருத்துகளை வெளியிடுவது சிறப்பு.

- உங்கள் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து ஆதாரங்கள் வருவது: கருத்துகள் உங்கள் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து ஆதாரபூர்வமாக இருந்தால் கருத்தை எடுத்து கொள்வதற்கு வாய்ப்புகள் அதிகம். கொள்கை குறித்த சுய மற்றும் மற்றவர்களின் அனுபவங்களிருந்து கருத்துகளை பகிர்வது மிகவும் அவசியம். மேலும் கருத்துகளோடு சேர்த்து ஆராய்ச்சி அறிக்கை அல்லது மற்ற தகவல் அளிப்பது உங்கள் கருத்துகளை பலப்படுத்தும்.

- கருத்தின் பின்னணி விளக்குவது: கொள்கை அல்லது சட்டத்தின் ஏதேனும் ஒரு பகுதி எந்த வகையில் நம் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று துல்லியமாக விளக்குவது அவசியம். இதில் கொள்கையின் தாக்கம் குறித்த பின்னணியையும் அவை எந்த விதத்தில் மற்ற கொள்கைகளுடனும் நீதிகளுடனும் முரண்பட்டு இருக்கிறது என்று விளக்க வேண்டும்.

- கூட்டு நலனுக்கு முன்னுரிமை : சுய அனுபவங்களை பகிர்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு கொள்கைகள் பிறரை எப்படி தாக்குகின்றது என்று கருதி அதற்கேற்ற பரிந்துரைகளை வழங்குவது மிகவும் அவசியம். இது ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பு அளிக்கும்.

- தீர்வு தரும் கருத்ததுகள் :பொதுவாக அரசு அதிகாரிகள் பல தரப்பட்ட தீர்வுகள் சேகரிக்க கலந்தாலோசனை நடத்துவார்கள். உங்கள் பரிந்துரைகள் கொள்கையை திடப்படுத்தி தீர்வு காணும் வண்ணம் இருந்தால் நன்றாக இருக்கும். இதன் மூலம் மக்களுக்கும் அரசுக்கும் கொள்கைகளை செயல்படுவதில் இருக்கும் இடையூறுகள் குறையும்.

- அனுதாபம் மிகுந்த கருத்துகள்: இறுதியாக கருத்துகளை வழங்கும்போது கொள்கை வகுப்பாளர்களும் நம்மை போன்று நன்மை செய்ய விழையும் மனிதர்கள் என்ற மனநிலையோடு செயல் பட வேண்டும். இது தரமான விவாதங்களுக்கும் நேர்மறையான தீர்வுகளுக்கும் வழி வகுக்கும்.

## 6. கூட்டு பணியாற்றுதல்

ஏற்கனவே பருவ நிலை மாற்றம் குறித்து பணியாற்றும் குழுவுடனோ அல்லது ஒத்த எண்ணம் கொண்ட தனி நபர்களோடு சேர்ந்து பணியாற்றலாம். இதன் மூலம் முயற்சியின் தாக்கம் வலுவடையும். தி யூத் போர் இந்தியா என்ற அமைப்பு கிளைமெட் ஜஸ்டிஸ் லைப்ரரி என்ற பருவ நிலை மாற்றம் குறித்த வளங்களை சேகரித்தது வைத்திருக்கிறது. வரைவு சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு அறிவிப்பு வெளி வந்தபோது இந்த அமைப்பு மக்களிடையே இதை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த பல நிகழ்ச்சிகளை நடத்தியது.

# உங்களின் கருத்துகள் ஏன் அவசியம்?

ஒரு நல்ல குடிமகனாக கலந்தாலோசனையில் உங்கள் பங்கேற்பு கீழ் காணும் காரணங்களுக்காக மிகவும் அவசியம்.

## 1. பிரதிநிதித்துவம்

கலந்தாலோசனையில் உங்கள் பங்கேற்பின் மூலம் உங்கள் எண்ணங்களும் அனுபவங்களும் எடுக்கப்படும் முடிவுகளுக்கு வித்தாக அமையும். பி டபிள்யூ சி மற்றும் ஐக்கிய நாடுகள் குளோபல் இம்பாக்ட் ரிப்போர்ட்டின் அறிக்கையின் படி வேளாண்மை துறையில் சுமார் 55% மகளிர் இருந்தாலும் கலந்தாலோசனையில் அவர்கள் பங்கு குறைவாக இருப்பதால் கொள்கைகள் அந்த அளவிற்கு சிறப்பானதாக இல்லை.

## 2. நுணுக்கமான கருத்துகள்

முன்மொழியப்பட்ட கொள்கை தவறுதலாக ஏதேனும் எதிர்மரையான தாக்கத்தை ஏற்படுத்தவிருந்தால் உங்கள் நுணுக்கமான கருத்துகள் அதை அடையாளம் காட்டி தடுக்க உதவும். சுற்றுச்ச்ச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் வரைவு ஜூ லை 2022 யில் வெளியிடப்பட்ட பொழுது தில்லியிலிருந்து ஒருவர் தங்கள் வாகனத்தின் மாசு கட்டுப்பாடு சான்றிதழை கைவசம் வைத்திருக்க வேண்டும் என்ற விதி அவசியமற்றது என்று நிரூபித்தார். காரணம் இந்த தகவல்கள் வாகன எண்ணோடு இணைந்துள்ளது மட்டுமல்லாமல் இணையதளத்திலும் இருக்கிறது என்று சுட்டிக் காட்டினார். இது போன்ற நுணுக்கமான பின்னூட்ட கருத்துகள் சட்டம் இயற்றுபவர்களுக்கு சட்டம் ஏற்படுத்தும் தாக்கத்தை உணர்த்துகிறது.

## 3. பொறுப்புடைமை கூட்டுதல்

பொதுக் கலந்தாலோசனை முடிவுகள் எடுக்கப்படுவதில் பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத்தன்மையை கூட்டுகிறது. எடுத்துக்காட்டாக, குஜராத் மாநிலத்தில் தேவ்பூமி துவாரகையில் விவசாயிகள் எடுத்த நடவடிக்கையால் மாசு படுத்தி கொண்டிருந்த பாக்சைட் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டது. விவசாயிகள் குஜராத் மாசு கட்டுப்பட்டு வாரியத்திடம் காசு மாற்று தடுப்பு சட்டத்தின் கீழ் புகார் எழுப்பினர். அரசு எந்த வித பொதுக் கலந்தாலோசனையும் நடத்தவில்லை என்றாலும் மக்கள் அரசின் பொறுப்புடைமையை கூட்டி நல்ல முடிவை கொண்டு வந்தார்கள். பொதுக் கலந்தாலோசனைகளை நடத்த கோரி அதன் மூலம் சட்டங்களுக்கான இணக்கத்தை கொண்டு வரலாம்.

## 4. அனுபவங்களை பகிர்தல்

முன்மொழியப்பட்ட கொள்கையின் தாக்கத்தை பற்றி உங்களுக்கு முன் அனுபவங்கள் இருந்தால் அதை பகிர்வது கொள்கைகளை வகுப்பவர்களுக்கு தாங்கள் எடுக்கும் முடிவுக்கள் மக்களை எந்த வகையில் பாதிக்கிறது என்று உணர உதவும். எடுத்துக்காட்டாக மேகாலயாவில் உமுங்கொட் நதிக்கு அருகே வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகள் ஒரு அணையை கட்டுவதை வெற்றிகரமாக தடுத்தனர். அங்கே எழுப்பவிருந்த அணை அவர்களது வேளாண்மை முறையான 'ஜூம்'மிற்கு பாதிப்பு ஏற்படுத்தவிருந்து. இந்த விவசாயிகளின் விவசாய முறையான உடைத்து எரிக்கும் முறை பலரால் இயறக்கைக்கு கேடு விளைவிக்கும் விதமாக இருப்பதாக விமர்சிக்கப் பட்டாலும் இவர்களது முறை தனித்துவம் பெற்றது. இவர்கள் இந்த முறையை பயன் படுத்தி காடுகளை விவசாயத்திற்கு தயாராக்கி பல பயிர்களை வளர்த்து வேறு இடத்திற்கு செல்வர். இதன் மூலம் ஏற்கனவே பயிரிடப்பட்ட இடம் தானாகவே வளம் அடையும்.

## பயனுள்ள கொள்கைகளுக்கு வழி வகுத்த வெற்றிகாரமான சில கலந்தாலோசனைகளின் எடுத்துக்காட்டுகள் கீழே காணலாம்


இந்தியாவில் பயனுள்ள கொள்கையை ஏற்படுத்திய பொது ஆலோசனைகளின் பல நிகழ்வுகளில் சில இங்கே உள்ளன.

### 1. வரைவு பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2021


ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களினால் சுற்றுசூழலுக்கு தீங்கு ஏற்படும். பல வருடங்களாக ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்ய பல கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. வரைவு பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2021-ஐ  குறித்த கலந்தாலோசனையின் போதும் மக்கள் இந்த கோரிக்கையை முன் வைத்தனர். பெப்சி, கோகோ கோலா போன்ற பெரிய நிறுவனங்கள் பிளாஸ்டிக் உறிஞ்சி என்ன சொல்லப்படும் ஸ்ட்ராவிற்கு விலக்கு கோரினர். ஆனால் மக்களின் கோரிக்கையை ஆதரித்து சுற்றுச்சூழல் அமைச்சகம் ஸ்ட்ராவையும் தடை செய்தது.

### 2. பிடி பிரிஞ்சால்

2005 ஆம் ஆண்டு மஹாராஷ்ட்ரா ஹைபிரிட் சீட்ஸ் என்ற நிறுவனம் பல விஞ்ஞான ஆய்வுகளை பிடி பிரிஞ்சால் (கத்திரிக்காய்) மீது நடத்தியது. இது ஒரு மரபணு மாற்றப்பட்ட உணவுப்பொருளாகும். நம் நாட்டில் உணவு பாதுகாப்பை பலப்படுத்தக் கூடிய நலன்கள் மரபணு மாற்றத்திற்கு இருந்ததாக கருதப்பட்டது. உச்ச நீதி மன்றம் பிடி பிரிஞ்சால் சாகுபடி மீதிருந்த தடையை 2010 இல் நீக்கினாலும் சுற்றுச்சூழல் அமைச்சகம் கலந்தாலோசனை நடத்தியது. ஆனால் மக்களின் கருத்தை ஏற்று பிடி பிரிஞ்சாலின் வணிகமயமாக்குதலுக்கு நிரந்தர தடை விதித்தது.



# பருவ நிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது எப்படி?



## 1. சமூக வலைத்தளம்

சமூக வலைத்தளத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வளங்களான போஸ்ட்ஸ், சிற்றேடுகள், புள்ளிவிவரங்கள் மற்றும் காணொளிகள் செய்து தகவல்களை பரப்பலாம்.



## 2. நிகழிச்சிகள் மூலம்


நீங்கள் இருக்கும் சமூகத்தில், விவாதங்கள், மேடை பேச்சு, பட்டறைகள் நடத்தி பருவ நிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி கலந்தாலோசனைகளின் மகத்துவத்தை பரப்பலாம்.

## 3. கூட்டு பணியாற்றல்


உங்கள் ஊரில் இருக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகள், பள்ளிகள் மற்றும் மதம் சார்ந்த அமைப்புகள் மூலம் பருவ நிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.



## 4. ஊக்குவிப்பு



உங்கள் சமூகத்தில் உள்ளவர்கள் கலந்தாலோசனைகளில் பங்கு பெறவும் பருவ நிலை மாற்றம் குறித்த சரியான சட்டம் மற்றும் கொள்கைகள் அமைக்க குரல் எழுப்பவும் ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய பங்கேற்பு முறையில் அனைவரின் குரலும் கேட்கும் படி முடிவுகள் எடுக்கப்படும். இது மேலும் சிலர் கலந்து பணியாற்ற நம்பிக்கை ஊட்டும்.



## 5. சிவிஸ். வோட்டை பயன்படுத்துதல்

சிவிஸ். வோட் என்ற வலைத்தளத்தில் நடக்கவிருக்கும் கலந்தாலோசனையை பற்றிய தகவல்கள் பார்த்து அவற்றில் பங்கேற்கலாம். சிவிஸ். வோட் பொது மக்கள் கருத்துகள் அளிக்க வரைவு சட்டங்கள் மற்றும் கொள்கைகளை தங்கள் வலைத்தளத்தில் வழங்குகின்றது. கலந்தாலோசனையின் இறுதி நாள் சிவிஸ். வோட் மக்களின் கருத்துகளை ஒருங்கிணைத்து கருத்து கேட்ட அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கிறது

பகுதி 2

# சிவில் சமுதாயம் மற்றும் இலாபமற்ற அமைப்புகளின்பருவ நிலை மாற்றம் குறித்த நடவடிக்கைகள்



# சிவில் சமுதாயம் மற்றும் இலாபமற்ற அமைப்புகளின்பருவ நிலை மாற்றம் குறித்த நடவடிக்கைகள்

சிவில் சமூக அமைப்பின் ஒரு உறுப்பினராகவும் பருவ நிலை மாற்ற ஆர்வலராகவும் நாங்கள் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு பொது மக்களை பருவ நிலை மாற்றம் குறித்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறோம். எங்கள் அனுபவத்தில் நாங்கள் உணர்ந்ததாவது இது ஒரு கடினமான செயல்முறை. பல சமயங்களில் நீங்கள் பருவ நிலை மாற்றத்தின் நேரடி தாக்கத்தையும் அரசு அல்லது ஏதேனும் துறையின் செயல்பாடுகளில் நம்பிக்கை இல்லாதவர்களோடு இணைந்து பணியாற்ற வேண்டி இருக்கும். இது கடினமாக இருந்தாலும் கூடி எடுக்கும் முயற்சிகள் பெரும்பாலும் வெற்றிகரமாக இருக்கும்.

இந்த பகுதியில் நாம் பெரிய அமைப்புகள், சிறிய கூட்டமைப்புகள் மற்றும் தனி ஆர்வலர்கள் பொது மக்களுக்கும் அரசுக்கும் இடையே இருக்கும் உறவை வலுப்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றி காணலாம். சிவில் சமூக அமைப்புக்கு பொது மக்களையும் சமூகத்தையும் ஆர்வலர்களையும் அணிதிரட்டி கலந்தாலோசனைகளில் பங்கேற்பை அதிகப்படுத்த ஒரு அறிய வாய்ப்பு உள்ளது. எனவே உங்கள் அடுத்த அடியை எடுத்து வைத்து மாற்றத்தை ஏற்படுத்துங்கள்.

## குடிமக்களோடு ஒன்று கூடி வேலை செய்வது

பருவ நிலை மாற்றம் குறித்த நடவடிக்கை பற்றிய விழிப்புணர்வு இல்லாதது மற்றும் கொள்கை ஆவணங்களை படித்து புரிந்து கொள்வதிலிருக்கும் சவால்கள் மக்கள் கலந்தாலோசனையில் கலந்து கொள்வதை கடினமாகின்றது.

மக்களை ஒன்று திரட்டுவதில் நீங்கள் கீழ் காணும் முயற்சிகளை எடுத்து இந்த சவால்களை சமாளிக்கலாம்.

## 1. கலந்தாலோசனை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

கலந்தாலோசனை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் பொது மக்கள் எடுக்கப்படும் முடிவுகளில் பங்கு கொள்ளலாம். பொதுவாக மக்களுக்கு தங்களுடைய கருத்துகள் கேட்கப்படுகின்றன என்பதே தெரியாமல் இருக்கும். அந்த காரணத்தால் அவர்கள் கலந்தாலோசனைகளில் பங்கு கொள்ளாமல் இருக்கலாம். அதைப்பற்றி தெரிந்தாலும் அவர்களுக்கு தங்களின் கருத்துக்களை எப்படி பகிர்வதக்கு என்று தெரியாமல் இருக்கும்.

அதுவும் குறிப்பாக கலந்தாலோசனைப் பற்றிய தகவல்களை நீங்கள் சமூக வலைத்தளம் வாட்சாப் மூலமாகவோ அல்லது விளம்பர இதழ்கள் தட்டிகள் மூலம் அனுப்பலாம். பொதுவாக படித்த பட்டதாரிகள், தொழில்முறையில் உள்ளவர்கள் அல்லது தொழில்நுட்பம் தெரிந்தவர்கள் தான் கொள்கை உருவாக்கத்தில் பங்கு பெற முடியும் என்று ஒரு தவறான எண்ணம் உள்ளது. பொது மக்களுக்கு தங்களின் அனுபவங்களும் கொள்கை உருவாக்குவர்களுக்கு சிறந்த தரமான கொள்கைகளை உருவாக்க உதவும் என்ற எண்ணம் வர வேண்டும்.

2019-இல் மும்பை மாநகராட்சி ஆரே காலனியில் 2238 மரங்கள் வெட்டுதல் குறித்து கருத்துகள் கோரி நாளிதழில் செய்தி வெளியிற்றிருந்தது. லெட் இந்தியா பிரீத் என்ற அமைப்பு சமூக வலைத்தளம் வாட்சாப் மூலம் கலந்தாலோசனைகளில் பங்கு கொள்வதன் அவசியத்தை பரப்பியது. இந்த தகவலுடன் கருத்துகள் பகிரும் முறைகளை விரிவாக விளக்கினர். இது மக்களின் பங்கேற்பை அதிகரித்தது.

## 2. வரைவு சட்டங்களை பற்றிய விவரம்

வரைவு சட்டம் அல்லது கொள்கையில் பொதுவாக தொழில்நுட்ப சொல்றகள் மிகுதியாகவும் புரிந்து கொள்ள கடினமாகவும் இருக்கும். பொதுவாக பருவ நிலை மாற்றம் குறித்த கொள்கைகளுடன் ஆராய்ச்சிகளும் தரவுத்தொகுப்புகளும் சேர்ந்து இருக்கும். இவை வரைவு சட்டத்தையும் கொள்கையையும் புரிந்து கொள்ள இன்னும் கடினமாக்குகின்றன.

அமைப்புகள் சட்டங்களைப் பற்றிய விவரங்களை எளிமைப்படுத்தி வழங்குவதுடன் அது மக்களை சமூக மற்றும் பொருளாதார விதத்தில் எப்படி பாதிக்கின்றது என்று குறிப்பாக வழங்கலாம். இவை விளக்கப்படம், காணொளி மற்றும் போட் காஸ்ட் போன்ற நவீன முறையில் விளக்கப்படலாம். நீங்கள் தயார் செய்யும் விவரத்தில் சட்டத்தின் ஒரு கண்ணோட்டம் அதன் சமூக மற்றும் பொருளாதார தாக்கம் பற்றிய விவரங்கள் இருக்க வேண்டும். மேலும் சுற்றுச்சூழல் அடிப்படை உரிமைகளை வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை எந்த விதத்தில் பாதிக்கின்றது என்ற தகவல்கள் இருக்க வேண்டும். முடிந்த அளவு அனைத்து மொழிகளிலும் இந்த தகவல்களை மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

டாக்தர்த்தி டு மி என்ற இதழ் சமூக வலைத்தளம் மூலம் மக்களுக்கு பிளாஸ்டிக் குப்பை மேலாண்மை விதிகள் கீழ் நீட்டிக்கப்பட்ட தயாரிப்பாளர் பொறுப்பின் அம்சங்களை ஆராய்ந்து மக்களுக்கு கொண்டு சேர்த்தது..

சிவிஸ் தங்கள் அமைப்பின் வலைத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்கலில் வரைவு சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் கொள்கைகளை மக்களின் கருத்துக்காக வெளியிட்டு வருகிறது.

யுவன் ஏவெஸ் என்ற ஒரு தனி ஆர்வலர் தன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் சென்னையின் பருவ நிலை மாற்றத்தை எதிகொள்ள தீட்டப்பட்ட செயல் திட்டத்தின் அம்சங்களை பகிர்ந்து மக்களை எடுக்கப்படும் முடிவுகளில் பங்கேற்குமாறு ஊக்குவித்தார்.

## 3. மக்களை ஒன்று திரட்டல்

சிவில் சமூக அமைப்பு பருவ நிலை மாற்றம் குறித்த கலந்தாலோசனையில் மக்களை பெரிய அளவில் பங்கேற்க வைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. இது மக்களுக்கு அவர்களின் கவலைகளை தெரிவிக்க ஒரு வாய்ப்பு அளிப்பதோடு கொள்கைகள் தயாரிப்பில் பங்கேற்கவும் ஒரு வாய்ப்பாக அமைகிறது. மக்களை திறம்பட ஒன்று திரட்ட சில வழிகளை கீழே காணலாம்:

பொது குழுக்கள் நடத்துவதும் மக்கள் ஒன்று கூட மன்றங்கள் அமைப்பதும் அவர்களின் எண்ணங்களையும் யோசனைகளையும் பகிர வாய்ப்பு அளிக்கும். கிளைமெட் குரூப் இந்தியா, வேர்ல்டு வைட் பண்ட் இந்தியா மற்றும் தி எனர்ஜி அண்ட் ரிசோஸர்ஸ் இன்ஸ்டிடியூட் வெற்றிகரமாக பொது குழுக்கள் நடத்தி மக்களிடம் பருவ நிலை மாற்றம் நடவடிக்கைக்கான ஒருமித்த கருத்தை ஒன்று திரட்டி உள்ளனர்.

கிரீன் பீஸ், சென்டர் போர் என்விரான்மெண்ட் எடுகேஷன் இன் இந்தியா மற்றும் சென்டர் போர் சயின்ஸ் அண்ட் என்விரான்மெண்ட் போன்ற அமைப்புகள் பல விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்தி மக்களுக்கு பருவ நிலை மாற்றம் குறித்த நடவடிக்கையில் பங்கேற்பதின் அவசியத்தை புகுத்தியுள்ளது.

கலந்தாலோசனைகளில் பொது மக்களின் பங்கேற்பை அதிகரிப்பதில் சமூக வலைத்தளம் பெரும் பங்கு வகிக்கின்றது. இதை அமைப்புகள் பயன் படுத்த வேண்டும். கிரீன் பீஸ், வேர்ல்டு வைட் பண்ட் போன்ற அமைப்புகள் தங்கள் சமூக வலைத்தளத்தைபயன் படுத்தி மக்களுக்கு தகவல்கள் வழங்கி மக்களின் பங்கேற்பை அதிகரித்துள்ளனர்.2020-இல் வேர்ல்டு வைட் பண்ட் இந்தியா இணையதளத்தில் பருவ நிலை மாற்றம் மற்றும் பல்லுயிர்பாதுகாப்பு குறித்த ஒரு பிரச்சாரத்தை நடத்தியது. இதில் இந்தியாவின்பல பகுதிகளிலிருந்து சுமார் 600 பேர் பங்கேற்றனர். யூத் கி ஆவாஜ் என்ற இன்னொரு அமைப்பு ஜீரோ சே ஹீரோ என்ற ஒரு

பிரச்சாரத்தை இணையத்தளத்தில் நடத்தி சென்னையின்பருவ நிலை மாற்றம் செயல் திட்டம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தியது. சில அமைப்புகள் தொழில்துறையோடு சேர்ந்து பல செயல் திட்டங்களை கொண்டு வந்துள்ளது. எடுத்துக்காட்டாக தி கிளைமெட் குரூப் இந்தியா மஹிந்திரா & மஹிந்திரா மற்றும் இஷ்னைடர் எலக்ட்ரிக் போன்ற நிறுவனங்களுடன் சேர்ந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் வளங்குன்றாநடைமுறைகளை வகுத்திருக்கின்றன. இறுதியாக சிவில் சமூக அமைப்புகள் கலந்தாலோசனை நடத்த அரசு துறைகளுடன்சேர்ந்து பணியாற்றலாம். இதன் மூலம் மக்களுக்கு கலந்தாலோசனைபற்றிய விழிப்புணர்வு மற்றும் தேவையான தகவல்கள் சென்றடைகிறது.

## அமைப்புகளோடும் அரசுகளோடம் சேர்ந்து பணியாற்றுதல்

ஆராய்ச்சி கூடங்கள் மற்றும் சிந்தனை கூடங்கள் கொள்கை வகுக்கும்அரசு துறைகளுக்குஆலோசகராக பணியாற்றலாம். அப்படி பணியாற்றுக்கையில் அவர்கள் கலந்தாலோசனனை பயனுள்ள முறையில் நடக்க உதவலாம்.

## 1. கலந்தாலோசனனைகள் நடத்த முயற்சி

அரசு துறைகளை சம்மந்தப்பட்ட மக்கள மற்றும் குடிமக்கள்குழுக்களுடன் சேர்ந்து கலந்தாலோசனனைகள் நடத்த வற்புறுத்த வேண்டும்.

- சட்டங்களும் கொள்கைகளும் மக்களுக்குதொடர்புடையதாக இருக்க வேண்டும்.
- கொள்கைகளை சிக்கனமாக செயல்படுத்தவேண்டும்
- வெற்றிகாமான கொள்கைகளை எடுத்துக்காட்டுவது

மேலும் நீங்கள் சட்டம் இயற்றுவதற்கு முன் நடத்த வேண்டிய கட்டாய கலந்தாலோசனைகொள்கையின் விதிகளை மீண்டும் வலியுறுத்தலாம். உதாரணத்துக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தின் விதி 5(3)யின் கீழ் சட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன் கருத்துகளையோ எதிர்ப்புகளையோ தெரிவிக்க 60 நாட்கள் இருக்கிறது.

மேலும் நீதிமன்றங்கள் மற்றும் தேசிய பசுமை தீர்ப்பாயம் போன்ற அமைப்புகள் தங்கள் தீர்ப்புகளில் கலந்தாலோசனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர். தில்லி உச்சநீதி மன்றம் உத்கர்ஷ் vs யூனியன் ஆப் இந்தியா என்ற வழக்கில் கலந்தாலோசனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளது. மேலும் கலந்தாலோசனை என்ற பெயரில் ஒரே நாளில் பல கேட்புரைகள் நடத்தக் கூடாது என்று தீர்ப்பில் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது . மேலும் தேசிய பசுமை தீர்ப்பாயம் கலந்தாலோசனையின் அம்சங்களை பற்றி கூறுகையில்ஒரு பயனுள்ள கலந்தாய்வுக்கு இடம், தேதி, நேரம் போன்றவை அவசியம். மேலும் சட்டத்தின்சுருக்கம்,

அறிக்கைகள்போன்றவை வட்டார மொழியில் மக்கள் அணுகும் படி அமைக்க வேடனும். மேலும் இந்த விதிகளை பின் படுத்தாமல் இருந்தால்கலந்தாலோசனை என்ற செயல் முறை பயனற்றதாகி விடும் என்று பசுமை தீர்ப்பாயம்கூறியிருக்கிறது.

## 2. கலந்தாலோசனையின் முடிவுகளை வெளியிடுவது

வெற்றிகரமான கலந்தாலோசனைகளின் முடிவுகளைவெளியிடுவதன் மூலம் மக்களின் பங்கேற்பையும் ஈடுப்பாட்டையும் தக்க வைக்க முடியும். ஒரு சிவில் சமூக அமைப்பு அரசு துறைகளை சேர்ந்தவர்களை கலந்தாலோசனைகளின் முடிவுகளை வெளியிட கோரி வலியுறுத்தமுடியும். இந்த முடிவுகள் வெளிப்படைத்தன்மையை உயர்த்தி பொறுப்புணர்ச்சியையும் கூட்டும். மேலும் முடிவெக்கும் செயல் முறையில் பொது மக்களை தங்கள் அனுபவங்களை பகிர ஊக்குவிக்கும்.



பகுதி 3

# ஊடகங்களில் பருவ நிலை மாற்றம் குறித்த நடவடிக்கைகள்



# ஊடகங்களில் பருவ நிலை மாற்றம் குறித்த நடவடிக்கைகள்



பத்திரிக்கையாளர்கள், ஊடகத்தில் இருப்பவர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் பருவ நிலை மாற்றம் குறித்த பொது கலந்தாலோசனைகள் மக்களை சென்று அடைவதில் பெரும் பங்கு வகுக்கின்றார்கள். தங்களை பாதிக்கும் முடிவுகளை எடுப்பதில் பங்கு கொள்வதிலும் அதற்கான புரிதலையும் இவை ஏற்படுத்துகின்றன. கலந்தாலோசனைகள் இன்னும் சிறப்பாக செயல்பட ஊடகத்துறை பல நடவடிக்ககைகளை எடுக்கலாம்:

## 1. கலந்தாலோசனைகளின் முக்கியத்துவத்தை எடுத்து காட்டுதல்

முக்கியமான நிகழ்வுகளைப் பற்றிய தகவல்களை மக்கள் செய்திகள் மூலமாகவும் இணையதளத்திலும் பெறுகின்றனர். பருவ நிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள கலந்தாலோசனைகளின் முக்கியத்துவத்தையும் அதில் சிறந்த முறையில் கலந்துகொள்ள வழிகளையும் செய்தியாளர்கள் தங்கள் நிகழிகளில் வழங்கலாம். மேலும் வெற்றிகரமான கலந்தாலோசனைகளின் தொகுப்புகளையும் வழங்கலாம். கலந்தாலோசனைகள் பற்றி அனைத்து தரப்பு மக்களுக்கும் தகவல் சேர்ப்பது அரசாங்கம் உட்பட அனைவரது பொறுப்பாகும். எனினும் ஊடகம் தங்களின் குறிப்பிடத்தக்க நிலையை பயன்படுத்தி கலந்தாலோசனைகளில் மக்களின் பங்கேற்பை அதிகரிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக தி இந்து நாளிதழ் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு 2020 சட்டத்தின் பல்வேறு அம்சங்களோடு அது மக்களுக்கு எந்த வகையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று விவரித்திருந்தது.

## 2. கலந்தாலோசனைகளின் பலன்களை பற்றி எழுதுவது

கலந்தாலோசனைகளை பற்றிய விவரங்கள் அதாவது எத்தனை பேர் பங்கு பெற்றார்கள், அரசாங்கம் பெற்ற கருத்துககள் என்ன, மக்களின் பங்கேற்பு மூலம் மாறிய கொள்கைகள் என்ன என்ற தகவல்கள் புள்ளிவிவரங்கள் கலந்தாலோசனைகளின் பயனையும் நம்பத்தன்மையையும் மக்களுக்கு

கொண்டு சேர்க்கும். மக்களுக்கு இந்த தாக்கம் சென்று அடைந்தால் அவர்கள் பங்கு கொள்வதில் இன்னும் மும்முரம் அடைவர்.

## 3. பொது கருத்துகளுக்கான மேடை

பருவ நிலை மாற்ற ஆர்வலர்கள், ஆராய்ச்சியாளர்கள், சுற்றுச்சூழல் நிபுணர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் என்று பலதரப்பட்ட மக்களின் கருத்துககளை வெளியிடுவதன் மூலம் வரைவு சட்டத்தில் அல்லது கொள்கையில் உள்ள வெவ்வேறு பரிமாணங்கள் வாசிப்பவர்களுக்கு சென்று அடையும்.

சாமானியர்களுக்கு சட்டம் அமைக்கப்பட்டுள்ள மொழி மற்றும் பருவ நிலை மாற்றம் குறித்த தகவல் தொகுப்பு போன்றவற்றை புரிந்து கொள்ள கடினமாக இருக்கும். இவற்றை விவரித்து வழங்கும் வலைப்பதிவு மற்றும் கருத்து தொகுப்புகள் மக்களுக்கு சட்டம் மற்றும் கொள்கைகள் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை புரிந்து கொள்ள உதவும். இதன் மூலம் அவர்களும் தங்கள் கருத்துக்களை நுணுக்கமான முறையில் பகிர முடியும்.
நாம் கருத வேண்டிய இன்னொரு முக்கிய அம்சம் மக்கள் பலர் பேசுவது தங்கள் தாய்மொழியோ அல்லது வட்டார மொழியோ தான். பல தகவல்கள் ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் தான் தற்போது உள்ளது. மற்ற இந்திய மொழிகளில் இயங்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் மேடை அமைத்து தர வேண்டும். எழுத்து வடிவத்தை தாண்டி நவீன தொடர்பு மற்றும் செய்தி பரவல் முறைகளான கானொலி, போட் காஸ்ட் போன்றவற்றையும் தயாரித்து வெளியிட வேண்டும்.

தி சிட்டிசன் மேட்டர்ஸ் மற்றும் தி பெட்டர் இந்தியா போன்ற பிரசுரங்கள் மக்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் பருவ நிலை மாற்றம் குறித்த சட்டங்களையும் கொள்கைகளையும் எளிமைப் படுத்தி வழங்குகின்றன.




## 4. நேரடியாக பாதிப்பு இருப்பவரை நேர்காணல் செய்தல்

சில நேரங்களில் தங்களுக்கு சம்மந்தம் இல்லாத தலைப்புகளை பற்றி கருத்து தெரிவிப்பது கடினமான விஷயம். இது போன்ற சூழல்களில் ஒரு கொள்கை அல்லது சட்டத்தால் நேரடியாக பாதிக்கப்படுவரை நேர்காணல் செய்து அவர்களின் கருத்தை மக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் வெளியே கொண்டு வர வேண்டும்.

எடுத்துக்காட்டாக மும்பையில் பாந்த்ரா வெர்சோவா கடல் வழியே இணைப்பு வழி வரவிருந்த பொழுது தி ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிக்கை இந்த வழிச்சாலையால் நேரடியாக பாதிக்கப்படுவோரை நேர்காணல் செய்திருந்தது. இது போன்ற முடிவுகளில் பிறரின் அனுபவங்கள் ஒருவருக்கு நேரடியாக பாதிப்பு இல்லை என்றாலும் ஒரு கருத்தை ஏற்படுத்திக்கொள்ள உதவும்.






## 5. சமூக வலைத்தளம்

சமூக வலைத்தளத்தின் சிறப்பு அம்சங்களை பயன் படுத்தி நிபுணர்கள் மற்றும் கொள்கை அல்லது சட்டங்களை சார்ந்தோருடன் கலந்து பேசி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

சமூக வலைத்தளத்தின் சிறப்பு அம்சமான நேரடி ஒளிபரப்பு போன்றவற்றை பயன் படுத்தி காணொளி மூலம் பொது கூட்டங்களை நடத்தலாம். ஈ பி டபிள்யூ மற்றும் டவுன் டு ஏர்த் போன்ற ஊடக அமைப்புகள் நிபுணர்களுடன் நிகழ்ச்சிகளை நடத்தி பருவ நிலை மாற்றம் குறித்த நுணுக்கங்களை மக்களுக்கு பரப்புகின்றன.

# வளங்கள்

**இணைப்புகளைப் பார்க்க வரைபடத்தில் உள்ள ஐகான்களைக் கிளிக் செய்யவும்**

**சிவிஸ் வோட்** :சமீப காலங்களில் நடந்த மற்றும் நடக்கவிருக்கும் கலந்தாலோசனை பற்றிய தகவல்கள் உள்ள ஒரு தளம்

**சிவிஸ் ட்ராக்கர்:** சட்டமியற்றித்திற்கு முன் நடக்கும் கலந்தாலோசனையுடன் சுற்றுச்சூழல் சட்டங்களின் இணக்கத்தை ஆராய்வது.

**சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம்:** தொழிற்ச்சாலைகள் அமைக்க கொடுக்கப்பட்ட அனுமதிகளை கவனிக்கும் நிபுணர் குழுவின் ஆய்வறிக்கை.

**கிளைமெட் ஆக்ஷன் டிராக்கர்**: உலகின் பல நாடுகளில் பருவ நிலை மாற்றம் குறித்த புள்ளிவிவரங்கள் அறிய ஒரு கருவி

**இ லா :** சுற்றுச்சூழல் பற்றிய நீதி மற்றும் சட்ட வளர்ச்சிகளை பற்றிய தகவல்களை சேகரிக்கும் வலைத்தளம்.

# வளங்கள்

**இணைப்புகளைப் பார்க்க வரைபடத்தில் உள்ள ஐகான்களைக் கிளிக் செய்யவும்**

**மாநில அளவிலான கலந்தாலோசனை பட்டியல்**



# நன்றிகள்

பருவ நிலை மாற்ற ஆர்வலர்கள், ஆராய்ச்சியாளர்கள், சுற்றுச்சூழல் நிபுணர்கள் மற்றும் ஊடக துறையை சேர்ந்தவர்கள் சட்டங்களையும் கொள்கைகளையும் பற்றிய தங்கள் நுண்ணறிவு மற்றும் அனுபவங்களை தாராளமாக பகிர்ந்ததால் தான் இந்த புத்தகம் சாத்தியமாயிற்று.

**தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள்**

- அயடி மிஸ்ரா, ஐக்கிய நாடுகள் சஸ்டெனபில் டெவலப்மென்ட் சல்யூஷன்ஸ் நெட்வர்க்
- தேபாதித்யோ சின்ஹா, கிளைமெட் & ஈகோ சிஸ்டம்ஸ்- விதி மையம் போர் சட்டக் கொள்கை
- மரியான் மானுவல்- தக்ஷின்
- மரிஷா தாகூர், ரெயின்மேட்டர் பௌன்டேஷன்
- ராதிகா ஜாவேரி, லெட் இந்தியா பிரீத்
- ரிஷப் லாலானி, ரெயின்மேட்டர் பௌன்டேஷன்
- சமீர் ஷிசோதியா, ரெயின்மேட்டர் பௌன்டேஷன்
- ஸ்ரீஜனி தத்தா, யூத் ஃபோர் கிளைமெட் இந்தியா
- சித்தார்த் அகர்வால், வேடிடம்
- தன்மயி கித், ரெயின்மேட்டர் அறக்கட்டளை
- உமா கே, பையோம் என்வயர்மென்டல் டிரஸ்ட்

**பத்திரிகையாளர்கள்**

- பானு ஸ்ரீதரன், சிட்டிசன் மேட்டர்ஸ்
- பிரயாக் தேசாய் அரோரா, ஹிந்துஸ்தான் டைம்ஸ்
- வைஷ்ணவி ராதோர், ஸ்க்ரோல்.இன்

எங்களிடம் பயிற்சி ஆராய்ச்சியாளர்களாக பணியாற்றிய நிவேதிதா பன்சல் (கோபர்னிக்கஸ் இன்சிட்டி டியூட் ஆப் சஸ்டெனபில் டெவலப்மென்ட், யூட்ரெக்ட் யூனிவர்சிட்டி மற்றும் சமர்த் கோர் கல்சி (நேஷனல் லா யூனிவர்சிட்டி ஒடிசா)



**தொகுப்பு**
டானிக்கா சேக்யூரியா

**வடிவம்**
ஜஸ்டிஸ் அட்டா

**மொழிபெயர்ப்பு**
இந்தி மற்றும் மராத்தி: தேவிலட்சுமி குமார், அனுவாத் சொல்யூஷன்ஸ்
கன்னடம்: ஸ்ரீகர தத்தாத்ரேயா, த்வானி லீகல் டிரஸ்ட்
தமிழில்: கிருபா ராமச்சந்திரன்



எழுதியவர்
**ஆதித்யா தன்னு, ஷோனோட்ரா குமார்**